01.07.2026
<u>C. C. No. 17/2012</u>

**அ.சா. 2 – திரு.வெங்கடாசாமி**

1வது எதிரி ஆஜர். 2வது எதிரி இறப்பு.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 12.58 பி.ப**

எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளது அந்த கம்பெனி ஓனர் சொல்லிகொடுத்தவாறு என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி**

**கம்பெனி ஓனர் யார் என்றால் பெயர் தெரியாது திண்டுக்கல்லை சேர்ந்தவர்.**

நேரு பாண்யடின் யார் என்றால் எனக்கு தெரியாது. பழனிவேல் மேலாளரை மட்டும்தான் தெரியும். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 யார் கொடுத்தார் என்றால் முதலாளி திண்டுக்கல்காரரர் கொடுத்தார். நான் அந்த கம்பெனியில் டிரைக்டர் மற்றும் சட்டி கலப்பை வாங்கினேன். எந்த வருடம் வாங்கினேன் என்றால் ஞாபகமில்லை. சுமார் 25 வருடம் இருக்கம். ரொக்கம் கொடுத்துதான் வாங்கினேன். நான் இவ்வாறு டிரைக்டர், கலப்பை வாங்கியதற்கு எனக்கு இரசீது கொடுத்திருப்பார்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரி பழனிவேல் மீது உரிமையாளர் என்ன வழக்கு கொடுத்துள்ளார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னிடம் எதுவும் கேட்டு விசாரிக்கவில்லை. நான் அந்த கம்பெனிக்கு நேரில் சென்றுள்ளேன். அதில் 10 நபர்களுக்கு மேலாக வேலை செய்து வந்தார்கள். அந்த கம்பெனியில் வரவு செலவிற்கு தனியாக ஆள் உள்ளார்கள் என்றால் சரிதான். பழனிவேல் சேல்ஸ் மேனஜர் ஆவார். அவர் வண்டியை காட்டுவார். எவ்வளவு தொகை என்று சொல்வார். பணத்தை வசூலிப்பது வேறொரு நபர் ஆவார். பணம் கட்டினால்தான் அந்த வண்டி வெளியே வரும் என்றால் சரிதான். அந்த நுழைவு வாயிலில் வாட்ச்மேன் இருப்பார்கள். வண்டி


JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.01 15:42:46 +0530

வருவது போவதை குறித்து கொள்வார்கள் என்றால் சரிதான். அந்த கம்பெனிக்கு எத்தனை உரிமையாளர்கள் என்று எனக்கு தெரியாது. உரிமையாளரை பார்த்ததில்லை.

மறுவிசாரணை – இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 01.08 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.01 15:42:51 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:01.07.2026